**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 02.09.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

உலகிலேயே இந்திய பொருளாதாரம்தான், தொடர்ச்சியான முறையில் விரைந்து வளரும் பொருளாதாரம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

செமி கண்டக்டர் துறையின் எதிர்காலத்தை, இந்தியாவுடன் இணைந்து உருவாக்குதில், உலக நாடுகள் ஆர்வம் கொண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பருவநிலை மாற்றத்தை கட்டுப் படுத்துவதற்கான, உலகளாவிய முயற்சிகளில், இந்தியா முன்னிலை வகிப்பதாக, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், தகுதியுள்ள 72 இளநிலை வழக்கறிஞர்களுக்கு, சட்டத் துறை மூலம், மாதம் 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் பணிகளை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

-----------------------------

*முர்மு-தமிழ்நாடு 1 (17)*

உலகிலேயே இந்திய பொருளாதாரம்தான், தொடர்ச்சியான முறையில் விரைந்து வளரும் பொருளாதாரம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று சென்னையில், சிட்டி யூனியன் வங்கியின் 120ஆம் ஆண்டு கொண்டாட்டங்களில் உரையாற்றிய

அவர், அரசின் பல்வேறு திட்டங்களால், நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் நிதி அதிகாரம் கிடைத்து இருப்பதாக கூறினார்.

நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியிலும், கிராம- நகர வித்தியாசத்தைப் போக்குவதிலும், வங்கித் துறை முக்கிய பங்காற்றி வருவதாக, குடியரசுத் தலைவர் தெரிவித்தார். நாடு முழுவதும் 56 கோடி ஜன் தன் வங்கிக் கணக்குகள் தொடக்கப் பட்டுள்ளதால், சாதாரண மக்கள், அரசுத் திட்டங்களின் பலன்களை எளிதில் பெற முடிவதாக, அவர் கூறினார். முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் வகையில், ஸ்டார்ட்- அப் நிறுவனங்கள் முதல், ஸ்மார்ட் சிட்டி இயக்கம் வரை, வங்கிகள், பல்வேறு துறைகளில் உதவ முடியும் என்றும், சிறு-குறு, மற்றும், நடுத்தர தொழில் நிறுவனங்களை, வளர்ச்சியின் உந்துசக்தியாக மாற்றுவதில் முக்கிய பங்காற்ற முடியும் என்றும், அவர் தெரிவித்தார். குடியரசுத் தலைவர் உரையில் இருந்து ஒரு பகுதி.....

(வாய்ஸ்-முர்மு)

-----------------------------

*முர்மு-தமிழ்நாடு 2 (9)*

சிட்டி யூனியன் வங்கியின் 120ஆம் ஆண்டு விழாவில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ் இந்தியப் பொருளாதாரம் துடிப்பாக செயல்பட்டு வருவதாக கூறினார். நடப்பு நிதியாண்டின் முதல்

காலாண்டில், வளர்ச்சி, 7.8 சதவிகிதமாக அதிகரித்து, இவ்வாண்டு ஜூலை மாதத்தில் பணவீக்கம், 1.5 சதவிகிதமாக குறைந்து இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். நாட்டில் மொத்தமுள்ள ஜன் தன் வங்கிக் கணக்குகளில், 56 சதவிகிதம் பெண்களுக்கானவை என்பதையும், 67 சதவிகிதம், கிராமப்புறக் கணக்குகள் என்பதையும் நிதியமைச்சர் சுட்டிக் காட்டினார்.

-----------------------------

*மோடி செமிக்கான் 1 (12)*

இந்தியா மீது உலகமே நம்பிக்கை வைத்து இருப்பதாகவும், செமி கண்டக்டர் துறையின் எதிர்காலத்தை, இந்தியாவுடன் இணைந்து உருவாக்கவே உலக நாடுகள் விரும்புவதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று புதுடெல்லி **யஷோபூமி** மாநாட்டுக் கூடத்தில், 3 நாள் **செமிக்கான் இண்டியா** மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சின்னஞ்சிறு கணிப்பொறிச் சில்லுகளால், உலக அளவில் பெரும் மாற்றங்கள் உருவாகும் நாள், வெகு தூரத்தில் இல்லை என்றார். **கருப்புத் தங்கம்** என அழைக்கப்பட்ட எண்ணெய் வளம், கடந்த நூற்றாண்டை உருவாக்கியது போல, **டிஜிட்டல் வைரம்** என்றே அழைக்கத்தக்க கணிப்பொறிச் சில்லுகள்தான், நடப்பு 21ஆம் நூற்றாண்டை வடிவமைத்து வருவதாக, பிரதமர் தெரிவித்தார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*மோடி செமிக்கான் 2 (10)*

**(வாய்ஸ்)**

உலக அளவிலான செமிகண்டக்டர் சந்தையின் மதிப்பு, வரவிருக்கும் ஆண்டுகளில், 3 டிரில்லியன் டாலர் என்ற அளவை தாண்டி அதிகரிக்கும் என்றும், இதில் இந்தியாவின் பங்கு கணிசமாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், இந்தியாவின் செமி கண்டக்டர் துறை தற்போது வேகமாக முன்னேறி வருவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இந்தியாவில், 2021ஆம் ஆண்டிற்கு பிறகு அனுமதிக்கப்பட்ட 10 செமிகண்டக்டர் திட்டங்களில், மொத்தம் 18 பில்லியன் டாலர் முதலீடு செய்யப்பட்டு வருவதாகவும், இத்துறைக்குத் தேவையான முக்கிய கனிமங்கள் எளிதில் கிடைப்பதை உறுதிப்படுத்த, தனித் திட்டம் ஒன்றை அரசு அமல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

-----------------------------

*மோடி செமிக்கான் 3 (5)*

செமிக்கான் இண்டியா மாநாட்டின் தொடக்க விழாவில், முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது கணிப்பொறிச் சில்லுகளை, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ்,பிரதமரிடம் வழங்கினார். நாட்டில் 5 செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைகளை நிறுவும் பணிகள் வேகமாக முன்னேறி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

-----------------------------

மோடி ஜீவிகா (10)

பெண்களின் வருமானம் மற்றும் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த, அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இதற்காகவே, **லாக்பதி தீதி, ட்ரோன் தீதி** போன்ற திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக, அவர் தெரிவித்துள்ளார். பெண்களுக்கு தொழில் கடன் வழங்க ஏதுவாக, பீகாரில் உருவாக்கப் பட்டுள்ள, **ஜீவிகா நிதி கூட்டுறவு கடன் சங்கத்தை**, இன்று மெய்நிகர் முறையில் திறந்து வைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். பெண்களின் அதிகார மேம்பாட்டில்தான், நாட்டின் வளர்ச்சி அடங்கி இருப்பதாகவும், பெண்களின் வாழ்வில், எல்லாத் தடைகளையும் நீக்கினால்தான், அதிகாரப் பங்கேற்பு மேம்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

-----------------------------

சுற்றுச் சூழல் (11)

உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாகத் திகழும் இந்தியா, பருவநிலை மாற்றத்தை கட்டுப் படுத்துவதற்கான, உலகளாவிய முயற்சிகளிலும் முன்னிலை வகிப்பதாக, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், நீடித்த வளர்ச்சி பற்றிய 20ஆவது உலக உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், பொருளாதாரம் உள்ளிட்ட ஒவ்வொரு செயல்பாட்டிலும், நெகிழ்வுத் தன்மை, மறுசுழற்சி, மற்றும், பொறுப்புணர்வை அதிகரித்து, வளங்குன்றா வளர்ச்சியை ஊக்குவித்தல் அவசியம் என்றார். இந்த அடிப்படையில்தான், சுற்றுச் சூழல் தணிக்கை

விதிமுறைகள், பசுமை கிரெடிட் திட்டம், முக்கிய கனிமங்கள் இயக்கம் ஆகிய 3 முக்கிய முன் முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

-----------------------------

*ரங்கசாமி-வழக்கறிஞர்* (9)

புதுச்சேரியில், தகுதியுள்ள 72 இளநிலை வழக்கறிஞர்களுக்கு, சட்டத் துறை மூலம், மாதம் 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் பணிகளை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார். சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், துறைச் செயலர் திரு.கேசவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். புதுச்சேரி அரசு சட்டக் கல்லூரியில் பயின்று, புதுச்சேரியிலேயே வழக்கறிஞராக தொழில் புரிவோர், 30 வயது, மற்றும், 2 லட்சம் ரூபாய் ஆண்டு வருமானத்திற்கு உட்பட்டவர்களாக இருந்தால், இந்த உதவித் தொகை வழங்கப் படுகிறது.

-----------------------------

*குடிநீர் பரிசோதனை* (14)

மத்திய அரசின் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள அனைத்து 10 கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கும், 2ஆம் கட்டமாக, 123 குடிநீர் களப் பரிசோதனைப் பெட்டிகளை இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். கொம்யூன் பஞ்சாயத்து

ஆணையர்கள், சுய உதவிக் குழுவினர், மற்றும், கிராம நீர் – துப்புரவுக் குழு உறுப்பினர்கள் இதை பெற்றுக் கொண்டனர். சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன், உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு. சக்திவேல், ஜல் ஜீவன் இயக்க ஒருங்கிணைப்பாளர் திரு. பாலமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். குடிநீரின் காரத் தன்மை, கடினத் தன்மை, மற்றும், குளோரைடு-ஃப்ளுரைடு போன்ற தரக் குறைபாடுகளை, அந்தந்த இடத்திலேயே கண்டறிய, இந்த களப் பரிசோதனைப் பெட்டிகள் உதவிகரமாக இருக்கும் என்று அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

முடி திருத்தம் (6)

புதுச்சேரியில், உழவர்கரை தொகுதியைச் சேர்ந்த முடி திருத்தும் தொழிலாளர்கள் நால்வருக்கு, பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை சார்பில், சலூன் நாற்காலிகள் மற்றும் முடித் திருத்த உபகரணங்களை, இன்று சட்டமன்ற உறுப்பினர் திரு, சிவசங்கர் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அலுவலக ஊழியர்கள், மற்றும், ஊர் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

-----------------------------

மேட்டூர் (8)

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக, மேட்டூர் அணை நடப்பாண்டில் 6ஆவது முறையாக மீண்டும் நிரம்பி உள்ளது. அணையின் நீர்மட்டம், மொத்த கொள்ளளவான 120 அடியை எட்டிய நிலையில், அணையில் இருந்து வினாடிக்கு 23 ஆயிரத்து 300 கனஅடி நீர் வெளியேற்றப் படுவதால், கரையோரப் பகுதிகளில் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என, வருவாய்த் துறையினர் அறிவுறுத்தி உள்ளனர். இதற்கிடையே ஒகேனேக்கல் காவிரி ஆற்றில் இன்று நீர்வரத்து, வினாடிக்கு 43 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

-----------------------------

*வானிலை (13)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. வரும் 8ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நாமக்கல்லில், 5 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

இதற்கிடையே, இன்று, வடமேற்கு வங்கக் கடலில் உருவாகி உள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுவடைந்து, வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த 24 மணி நேரத்தில், ஒடிசா பகுதிகளை கடக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, வங்கக் கடல் பகுதிகள்,

தமிழக கடலோரப் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-----------------------------

பேட்மிண்டன் (9)

உலக பேட்மிண்டன் சேம்பியன் பட்டப் போட்டிகள், அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் புதுடெல்லியில் நடைபெற உள்ளது. பாரீசில் நடைபெற்ற, நடப்பாண்டிற்கான உலக பேட்மிண்டன் சேம்பியன் பட்டப் போட்டிகளின் நிறைவு விழாவில், இதற்கான அறிவிப்பு வெளியிட்டப்பட்டது. உலக பேட்மிண்டன் சேம்பியன் பட்டப் போட்டிகள், 17 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் இந்தியாவில் நடைபெற உள்ளதும், இந்த இடைப்பட்ட காலத்தில், பி.வி. சிந்து, ஹெச். எஸ். பிரணாய், ராங்கி ரெட்டி-சிராக் ஷெட்டி போன்ற இந்திய வீரர்-வீராங்கனைகள், உலக அளவிலான பேட்மிண்டன் போட்டிகளில் பல்வேறு வெற்றிகளை ஈட்டி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

சிங்கப்பூர் பிரதமர் (8)

சிங்கப்பூர் பிரதமர் திரு. லாரன்ஸ் வோங், பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பின் பேரில், 3 நாள் பயணமாக இன்று மாலை இந்தியா வருகிறார். இரு தலைவர்களும் வரும் வியாழக் கிழமை புதுடெல்லியில் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர். இந்தியாவிற்கும், சிங்கப்பூருக்கும் இடையிலான தூதரக உறவுகள், 60 ஆண்டுகளை பூர்த்தி

செய்யும் நிலையில், சிங்கப்பூர் பிரதமரின் இந்தியப் பயணம் மேற்கொள்ளப் படுகிறது. அவர் இப்பயணத்தின் போது, குடியரசுத் தலைவரையும் சந்திக்க இருக்கிறார்.

-----------------------------

*ஆப்கானிஸ்தான்* (7)

ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை, ஆயிரத்து 124 ஆக அதிகரித்துள்ளது. சுமார் மூவாயிரத்து 250 பேர் காயமடைந்து இருப்பதாகவும், தகவல் வெளியாகி உள்ளது. கிழக்கு ஆப்கானிஸ்தானின் குனார் மாகாணத்தில் ஏற்பட்ட, சக்தி வாய்ந்த, இந்த நில அதிர்வில், 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விடுகள் இடிந்து விழுந்தன. உதவி-மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், பாதிப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

-----------------------------

*இலங்கை* (7)

கச்சத் தீவை மத்திய அரசு மீட்க வேண்டும் என தமிழக அரசு வலியுறுத்தி வரும் நிலையில், இலங்கையின் நில ஒருமைப்பாடு, மற்றும் இறையாண்மையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று, இலங்கை அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே கூறியுள்ளார். வட இலங்கையில் பயணம் மேற்கொண்டுள்ள அவர், இன்று யாழ்பாணத்தில், அரசு விழா ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர்

கச்சத் தீவு சென்று, அங்குள்ள புனித அந்தோனியார் கோவிலில் வழிபட்டார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலகிலேயே இந்திய பொருளாதாரம்தான், தொடர்ச்சியான முறையில் விரைந்து வளரும் பொருளாதாரம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

செமி கண்டக்டர் துறையின் எதிர்காலத்தை, இந்தியாவுடன் இணைந்து உருவாக்குதில், உலக நாடுகள் ஆர்வம் கொண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பருவநிலை மாற்றத்தை கட்டுப் படுத்துவதற்கான, உலகளாவிய முயற்சிகளில், இந்தியா முன்னிலை வகிப்பதாக, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், தகுதியுள்ள 72 இளநிலை வழக்கறிஞர்களுக்கு, சட்டத் துறை மூலம், மாதம் 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் பணிகளை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**